**குடியிருப்பாளர்களுக்குப் பகிரங்க மடல்**

அன்பார்ந்த குடியிருப்பாளர்களே,

அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றத்தின் (AHPETC) நிர்வாக முகவர் ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்ற விவாதம் நடைபெற்றதோடு, ஊடகங்களிலும் எதிர்மறையான பல செய்திகள் வெளியிடப்பட்டன. இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய தவறான கண்ணோட்டங்களைத் தெளிவுபடுத்துவதற்காக நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். நகர மன்ற நிர்வாகம் குறித்த சில விவகாரங்களின் நடப்பு நிலவரத்தையும் உங்களிடம் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**நகர மன்ற ஒப்பந்தங்களுக்கான பொது ஏலக்குத்தகை**

நகர மன்றம் "நண்பர்களுக்கு" ஒப்பந்தங்களைக் கொடுத்ததா?

இல்லை.

உண்மை என்னவெனில், நிர்வாக முகவர், அத்தியாவசியப் பராமரிப்பு, சேவைப் பிரிவு ஆகிய சேவைகளுக்கான ஒப்பந்தங்களுக்கு 2012ல் பொது ஏலக்குத்தகைகள் அறிவிக்கப்பட்டு, ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. 2014 மற்றும் 2015 ஆண்டுகளிலும், முறையே நிர்வாக முகவர் மற்றும் அத்தியாவசியப் பராமரிப்பு, சேவைப் பிரிவு ஆகிய ஒப்பந்தங்களுக்குப் பொது ஏலக்குத்தகைகள் அறிவிக்கப்பட்டன. யார் வேண்டுமானாலும் பொது ஏலக்குத்தகையில் விண்ணப்பம் தாக்கல் செய்யலாம். **நகர மன்றம் பொது ஏலக்குத்தகையில் நண்பர்களுக்காக ஒப்பந்தங்களை ஒதுக்கி வைப்பதும் இல்லை, அவ்வாறு ஒதுக்கி வைக்கவும் முடியாது**.

அவசரமான பொறுப்பேற்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் 2011 ஜூலை முதல் 2012 ஜூலை வரையிலான ஓராண்டு காலகட்டத்திற்கு மட்டுமே நிர்வாக முகவர் சேவைக்குப் பொது ஏலக்குத்தகை அறிவிக்கப்படவில்லை. நகர மன்றத்தின் ஆரம்பக்கட்ட நிர்வாகப் பொறுப்பை ஏற்பதற்கான ஓராண்டுகால இடைக்கால ஒப்பந்தத்தை, பொது ஏலக்குத்தகை நடத்தாமல், முன்னாள் ஹவ்காங் நகர மன்றத்தின் மேலாளர்களையும் ஊழியர்களையும் கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட FM Solutions & Services Pte Ltd (FMSS) நிறுவனத்திடம் வழங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்தனர். நகர மன்றத்தின் நிர்வாகப் பொறுப்பைத் தங்குதடையின்றி ஏற்பதற்கு மிகக்குறுகிய காலகட்டமே இருந்ததாலும், குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் எந்தவித இடையூறுகளும் ஏற்படுவதைத் தவிர்க்கவும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நகர மன்ற நிதிநிலை விதிமுறைகளின் பத்தி 76ன்கீழ், நிர்வாக முகவர் ஒப்பந்தத்திற்குப் பொது ஏலக்குத்தகை அறிவிக்காதிருக்க அனுமதி உண்டு. ஆனால், இந்தக் கட்டத்தில் FMSS நிறுவனத்திற்கு வழக்கமான மூன்று ஆண்டுகால நிர்வாக முகவர் ஒப்பந்தத்தை நகர மன்ற அதிகாரிகள் வழங்கவில்லை. ஏனெனில், நகர மன்ற நிர்வாகத்தின் பொறுப்பேற்பு பூர்த்தி அடைந்து, நடைமுறைச் செயல்பாடுகள் நிலைப்படுத்தப்பட்ட பிறகு கூடிய விரைவில் நிர்வாக முகவர் சேவைகளுக்குப் பொது ஏலக்குத்தகையை அறிவிக்க நகர மன்றம் நினைத்திருந்தது.

**நிர்வாக முகவர் கட்டணங்கள் மற்றும் "மிகையான கட்டணம்"**

அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றம் FMSS நிறுவனத்திற்கு ஆண்டுக்கு உத்தேசமாக $1.6 மில்லியன் மிகையான கட்டணம் செலுத்தியதாகவும், அதனால் நான்கு ஆண்டுகளில் உத்தேசமாக $6.4 மில்லியன் மிகையான கட்டணம் செலுத்தப்பட்டதாகவும் நீங்கள் செய்திகளில் பார்த்தும் கேட்டும் இருக்கக்கூடும்.

இந்தக் குற்றச்சாட்டை ஆதரிப்பதற்காக, 12 பிப்ரவரி 2015 அன்று நடந்த நாடாளுமன்ற விவாதத்தின்போது, நகர மன்றங்களின் 2014ம் ஆண்டுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதங்களைக் காட்டும் அட்டவணை விநியோகிக்கப்பட்டது. அதோடு, " FMSS நிறுவனம் ஒவ்வொரு வர்த்தகக் கடைக்கும் $14.92 கட்டணம் விதிக்கிறது, மற்ற அனைத்து நகர மன்றங்களும் $4.80 முதல் $6.65 வரை மட்டுமே விதிக்கின்றன," என்றும் " FMSS நிறுவனம் ஒவ்வொரு வீட்டுக்கும் $7.43 கட்டணம் விதிக்கிறது,

மற்றவர்கள் $4.80 முதல் $6.65 வரை மட்டுமே விதிக்கின்றனர்," என்றும் சட்ட அமைச்சர் கூறினார். இவற்றை அடிப்படையாகப் பயன்படுத்தி, 2014ம் ஆண்டுக்கான FMSS நிறுவனத்தின் கட்டண விகிதங்களையும் மற்ற நகர மன்றங்களின் "மதிப்பிடப்பட்ட சராசரி" கட்டண விகிதங்களையும் ஒப்பிட்டு, மேற்காணும் மிகையான கட்டணங்களை அவர் கணித்தார்.

அமைச்சர் பயன்படுத்திய நிர்வாக முகவர் கட்டண விகிதங்கள் எங்களுக்குப் புதிராக இருந்தன. எனவே, தேசிய வளர்ச்சி அமைச்சரிடம் மேல்விவரங்கள் கோரி, நாடாளுமன்றத்தில் கேள்விகள் தாக்கல் செய்தேன். 5 மார்ச் 2015 அன்று, அமைச்சர் பின்வரும் அட்டவணையை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். இவ்விவகாரத்தைத் தெளிவுபடுத்த அந்த அட்டவணையை நான் இங்கு வெளியிடுகிறேன்.

**அட்டவணை 1 - ஒவ்வொரு வீட்டுக்கும் நகர மன்றத்தின் நிர்வாக முகவர் கட்டண விகிதங்கள் (2011-2014)**

| **நகர மன்றம்** | **2011** | **2012** | **2013** | **2014** |
|---|---|---|---|---|
| அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் | $7.87** | $7.87** | $7.01 | $7.43 |
| அங் மோ கியோ | $5.08 | $5.08 | $5.08 | $5.33 |
| சுவா சூ காங் | $5.13 | $5.13 | $5.06* | $5.06 |
| ஈஸ்ட் கோஸ்ட் | $6.10 | $6.20 | $6.30 | $5.10 |
| ஹாலந்து-புக்கிட் பாஞ்சாங் | $5.95 | $6.10 | $6.20 | $6.30 |
| ஜூரோங் | $5.35 | $5.45 | $5.55 | $5.55 |
| மரீன் பரேடு | $5.13 | $5.13 | $5.13 | $5.13 |
| மோல்மின்-காலாங் | $6.63 | $6.63 | $6.63 | $5.80 |
| நீ சூன் | $6.05 | $6.20 | $6.30 | $6.40 |
| பாசிர் ரிஸ்-பொங்கோல் | $6.11 | $6.20 | $6.25 | $5.50 |
| பொத்தோங் பாசிர் | $6.63 | $7.80 | $7.80 | $5.80 |
| செம்பவாங் | $6.05 | $6.20 | $6.30 | $6.40 |
| தெம்பனிஸ் | $5.00 | $5.00 | $4.79* | $4.79 |
| தஞ்சோங் பகார் | $6.22 | $6.25 | $6.45 | $6.65 |
| வெஸ்ட் கோஸ்ட் | $6.01 | $6.01 | $6.10 | $6.21 |

குறிப்பு:

* பிரதான கட்டண விகிதக் காலகட்டத்தின்போது நிர்வாக முகவர் மாறியதைக் குறிக்கிறது.

** வீடுகளுக்கும் வர்த்தகக் கடைகளுக்கும் இடையில் வேறுபடுத்தாமல், கார்ப்பேட்டை நிர்வாகத்தையும் உள்ளடக்கி, மொத்தமாகச் செலுத்தப்பட்ட நிர்வாக முகவர் கட்டணங்களைப் பயன்படுத்தி தேசிய வளர்ச்சி அமைச்சு வகுத்த புள்ளிவிவரம்.

அட்டவணை 1ல் இடம்பெறும் வீடுகளுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதங்களின் அடிப்படையில் பின்வருபவற்றைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்:

1) **மசெக நகர மன்றங்களின் 2014ம் ஆண்டுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதங்கள், முந்திய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில், ஆறு நகர மன்றங்களில் குறைவாக இருந்தன**. 2011ல், எட்டு மசெக நகர மன்றங்களின் ஒவ்வொரு வீட்டுக்கான நிர்வாக முகவர் கட்டணம் $6க்கு மேல் இருந்தது, 2012 மற்றும் 2013ல் ஒன்பது நகர மன்றங்களில் $6க்கு மேல் இருந்தது. 2014ல், இந்த எண்ணிக்கை ஐந்தாகக் குறைந்தது. அதோடு, மசெக நகர மன்றங்களின் "மதிப்பிடப்பட்ட சராசரி" நிர்வாக முகவர் கட்டண விகிதம் ஆகக்குறைவாக இருந்தது.

2) **2013ம் ஆண்டோடு ஒப்பிடுகையில், நான்கு மசெக நகர மன்றங்களின் ஒவ்வொரு வீட்டுக்கான நிர்வாக முகவர் கட்டணம் 2014ல் திடீரென வெகுவாகக் குறைந்தது, ஆனால் நிர்வாக முகவர் மாறவில்லை**. ஈஸ்ட் கோஸ்ட்டின் கட்டணம் $6.30ல் இருந்து $5.10 ஆகவும், மோல்மின்-காலாங்கின் கட்டணம் $6.63ல் இருந்து $5.80 ஆகவும், பாசிர் ரிஸ்-பொங்கோலின் கட்டணம் $6.25ல் இருந்து $5.50 ஆகவும், பொத்தோங் பாசிரின் கட்டணம் $7.80ல் இருந்து $5.80 ஆகவும் குறைந்தன.

அடுத்ததாக, வர்த்தகக் கடைகளுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதப் புள்ளிவிவரங்களைப் பார்ப்போம்:

**அட்டவணை 2 - ஒவ்வொரு வர்த்தகக் கடைக்கும் நகர மன்றத்தின் நிர்வாக முகவர் கட்டணங்கள் (2011-2014)**

| **நகர மன்றம்** | **2011** | **2012** | **2013** | **2014** |
|---|---|---|---|---|
| அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் | $7.87** | $7.87** | $14.08 | $14.92 |
| அங் மோ கியோ | $5.08 | $5.08 | $5.08 | $5.33 |
| சுவா சூ காங் | $5.13 | $5.13 | $5.06* | $5.06 |
| ஈஸ்ட் கோஸ்ட் | $11.50 | $11.50 | $11.50 | $5.10 |
| ஹாலந்து-புக்கிட் பாஞ்சாங் | $5.95 | $6.10 | $6.20 | $6.30 |
| ஜூரோங் | $5.35 | $5.45 | $5.55 | $5.55 |
| மரீன் பரேடு | $5.13 | $5.13 | $5.13 | $5.13 |
| மோல்மின்-காலாங் | $6.63 | $6.63 | $6.63 | $5.80 |
| நீ சூன் | $6.05 | $6.20 | $6.30 | $6.40 |
| பாசிர் ரிஸ்-பொங்கோல் | $11.50 | $11.50 | $11.50 | $5.50 |
| பொத்தோங் பாசிர் | $6.63 | $7.80 | $7.80 | $5.80 |
| செம்பவாங் | $6.05 | $6.20 | $6.30 | $6.40 |
| தெம்பனிஸ் | $5.00 | $5.00 | $4.79* | $4.79 |
| தஞ்சோங் பகார் | $6.22 | $6.25 | $6.45 | $6.65 |
| வெஸ்ட் கோஸ்ட் | $6.01 | $6.01 | $6.10 | $6.21 |

குறிப்புகள்: மேற்காணும் அட்டவணை 1ன் * மற்றும் ** குறிப்புகளைக் கவனத்தில் கொள்க.

2014க்கு முன்பாக, சில மசெக நகர மன்றங்களின் நிர்வாக முகவர்கள், வீடுகளோடு ஒப்பிடுகையில் வர்த்தகக் கடைகளை நிர்வகிப்பதற்குக் கூடுதல் கட்டணம் விதித்து வந்ததை அட்டவணை 2ல் கவனித்தோம். எடுத்துக்காட்டாக, ஈஸ்ட் கோஸ்ட் மற்றும் பாசிர் ரிஸ் பொங்கோல் நகர மன்றங்களில் வர்த்தகக் கடைகளுக்கான நிர்வாக முகவர் கட்டணம் $11.50. ஆனால் வீடுகளுக்கான நிர்வாக முகவர் கட்டணம் சுமார் $6 ஆக இருந்தது. அல்ஜூனிட் நகர மன்றத்தின் முன்னாள் நிர்வாக முகவரான CPG Facilities Management (CPG) நிறுவனமும் இதே நடைமுறையைக் கடைப்பிடித்தது. அதனால்தான், முன்னாள் அல்ஜூனிட் நகர மன்றத்தில் வீடுகளுக்கும் வர்த்தகக் கடைகளுக்கும் வெவ்வேறு நிர்வாக முகவர் கட்டணங்கள் இருந்தன (அட்டவணை 3 பார்க்கவும்).

அட்டவணையில் உள்ளபடி, 2014ல், மசெக நகர மன்றங்களை நிர்வகிக்கும் அனைத்து நிர்வாக முகவர்களும், வர்த்தகக் கடைகளுக்கும் வீடுகளுக்கும் ஒரே நிர்வாக முகவர் கட்டணத்தை விதிக்கும் நடைமுறையை வழக்கமாக்கினர். எனவே, 2014ம் ஆண்டின் கட்டண விகிதங்களை மட்டும் கவனத்தில் கொண்டால், மசெக நகர மன்றங்களின் நிலையான கட்டணங்களோடு ஒப்பிடுகையில் அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றம் வர்த்தகக் கடைகளுக்குச் செலுத்திய $14.92 நிர்வாகக் கட்டணம் அளவுக்கு அதிகமாகத் தோன்றும்.

எது எப்படி இருந்தாலும், "மிகையான கட்டண" உத்தேசங்களை வகுப்பதற்கு அமைச்சர்கள் பயன்படுத்திய அதே அடிப்படையை நாம் பயன்படுத்தினால், தஞ்சோங் பகார் (77,300 யூனிட்டுகள்), நீ சூன் (65,000 யூனிட்டுகள்), செம்பவாங் (67,000 யூனிட்டுகள்) போன்ற மசெக நகர மன்றங்களும் ஒவ்வோர் ஆண்டும் தத்தம் நிர்வாக முகவர்களுக்கு முறையே சுமார் $860,000, $530,000, $550,000 மிகையான கட்டணம் செலுத்துகின்றன. தஞ்சோங் பகார், நீ சூன், செம்பவாங் நகர மன்றங்கள் தங்களது நிர்வாக முகவர்களுக்கு மிகையான கட்டணம் செலுத்துவதாக நான் குற்றம் சாட்டவில்லை. மாறாக, ஒரு நகர மன்றத்தின் நிர்வாக முகவர் கட்டண விகிதங்களை, அனைத்து நகர மன்றங்களின் நிர்வாக முகவர் கட்டண விகிதங்களின் "மதிப்பிடப்பட்ட சராசரியுடன்" ஒப்பிடுவது, நிர்வாக முகவர் விதிக்கும் கட்டணங்கள் நியாயமானவையா என்பதை மதிப்பிடுவதற்குச் சரியான வழி அல்ல என சுட்டிக்காட்டுகிறேன். மேற்காணும் அட்டவணை 1 மற்றும் 2ல் நீங்கள் பார்த்தீர்களானால், நகர மன்றங்களுக்கு இடையில் நிர்வாக முகவர் கட்டண விகிதங்களில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஒவ்வொரு நகரின் புவியியல்பிலும் தேவைகளிலும் உள்ள வேறுபாடுகளை அவை காட்டுகின்றன.

**போட்டித்தன்மையில்லாத சூழலில் நிர்வாக முகவர் ஒப்பந்தத்திற்கு நியாயமான விலை நிர்ணயித்தல்**

நாடாளுமன்ற விவாதத்தின்போது, தெம்பனிஸ் மற்றும் சுவா சூ காங் நகர மன்றங்களை அமைச்சர் குறிப்பிட்டார். ஏனெனில், இவ்விரு நகரங்களிலும் அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றத்திலுள்ள யூனிட்டுகளுடன் ஒப்பிடத்தக்க அல்லது அதே அளவு யூனிட்டுகள் இருப்பதாகக் கூறப்பட்டது. இவ்விரு மசெக நகர மன்றங்களும் 2014ல் ஆகக் குறைவான நிர்வாக முகவர் கட்டணங்களை விதித்தன (அட்டவணை 1 பார்க்கவும்). வேறுபாடு இருந்தாலும்கூட, தெம்பனிஸ் மற்றும் சுவா சூ காங் நகர மன்றங்களை அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றத்துடன் எளிதில் ஒப்பிட முடியாது. ஏனெனில், எல்லா நகரங்களின் புவியியல்பும் மாறுபட்டவை. அதோடு, ஒவ்வொரு நகரின் நிர்வாகத்தையும் அந்நகரின் மற்ற இயல்புகளும் பாதிக்கின்றன.

ஏற்கனவே கூறியதுபோல, 2012ல் பொது ஏலக்குத்தகையை அறிவிப்பதற்கு முன்பாக, குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும் சேவையில் எந்த இடையூறும் ஏற்படாமல் தவிர்க்கும் நோக்கத்துடன் FMSS நிறுவனத்திற்கு ஓராண்டுகால இடைக்கால ஒப்பந்தத்தை வழங்க நாங்கள் தீர்மானித்தோம். இந்த ஓராண்டுகால நிர்வாக முகவர் ஒப்பந்தத்திற்கு எப்படி நியாயமான விலை நிர்ணயிப்பது என்பதே கேள்வி.

நிர்வாக முகவர் ஒப்பந்தத்திற்கு நியாயமான விலை நிர்ணயிப்பதற்கு, முன்னாள் அல்ஜூனிட் நகர மன்றமும் அதன் நிர்வாக முகவரான CPG நிறுவனமும் ஒப்பந்தம் செய்திருந்த நிர்வாக முகவர் கட்டண விகிதங்களை அடிப்படையாகப் பயன்படுத்துவதே நியாயமென்று நாங்கள் நினைத்தோம். முன்னாள் அல்ஜூனிட் நகர மன்றம் CPG நிறுவனத்துடன் பின்வரும் நிர்வாக முகவர் கட்டண விகிதங்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தின் தொழில்முறைத்துவத்தைச் சந்தேகப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அதைவிட முக்கியமாக, அட்டவணை 1 மற்றும் 2ல் இடம்பெறும் மாறுபட்ட நிர்வாக முகவர் கட்டண விகிதங்களை ஆதாரமாகக் கருதி, CPG நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிர்வாக முகவர் கட்டண விகிதங்களில், நகரின் தனித்துவ புவியியல்பு மற்றும் இதர அம்சங்களின் அடிப்படையில் நகரில் பெரும்பகுதியின் நிர்வாகச் செலவு பிரதிபலிக்கப்படுவதாகவும் நாங்கள் நம்பினோம்.

**அட்டவணை 3. அல்ஜூனிட் நகர மன்றத்துடன் CPG நிறுவனம் ஒப்பந்தம் செய்திருந்த நிர்வாக முகவர் கட்டண விகிதங்கள்**

| காலகட்டம் | வீடுகள் | வர்த்தகக் கடைகள் |
|---|---|---|
| 1 ஆகஸ்ட் 2010 - 31 ஜூலை 2011 | $6.03 | $12.80 |
| 1 ஆகஸ்ட் 2011 - 31 ஜூலை 2012 | $6.37 | $12.80 |
| 1 ஆகஸ்ட் 2012 - 31 ஜூலை 2013 | $6.73 | $12.80 |

எனவே, அல்ஜூனிட்-ஹவ்காங் நகர மன்றம் (AHTC), FMSS நிறுவனத்தை ஓராண்டு காலத்திற்கு நிர்வாக முகவராக நியமித்தபோது, முன்னாள் அல்ஜூனிட் நகர மன்றமும் CPG நிறுவனம் அந்த ஆண்டுக்கு (1 ஆகஸ்ட் 2011-31 ஜூலை 2012) ஒப்பந்தம் செய்திருந்த அதே நிர்வாக முகவர் கட்டண விகிதத்தில் முன்னாள் அல்ஜூனிட் நகர மன்றத்திற்குப் பொறுப்பேற்க ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதாவது, FMSS நிறுவனத்துடனான எங்கள் ஒப்பந்தம், CPG நிறுவனத்தின் ஒப்பந்தத்தில் இரண்டாவது ஆண்டுக்குக் குறிப்பிடப்பட்ட நிர்வாக முகவர் கட்டண விகிதத்தைப் போல, வீடுகளுக்கு $6.37 மற்றும் வர்த்தகக் கடைகளுக்கு $12.80 என இருந்தது (அட்டவணை 3ல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது). ஓராண்டுகால இடைக்கால ஒப்பந்தத்தின் முதல் செலவுக் கூறு இது. ஆனால், முன்னாள் ஹவ்காங் நகர மன்றத்தின் ஊழியர்களை அவர்களது அப்போதைய சம்பளத்தில் ஏற்றுக்கொள்ளவும், பொறுப்பேற்புத் தேதிக்கு முன்பாக பொறுப்பேற்புக்குத் தயார்ப்படுத்துவதற்காகக் கூடுதல் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளவும் இரண்டாவது செலவுக் கூறும் இருந்தது.

நிர்வாக முகவர் சேவைகளுக்காக 2012 மற்றும் 2014ல் நடத்தப்பட்ட பொது ஏலக்குத்தகைகளில் போட்டி நிறுவனங்கள் எதுவும் கலந்துகொள்ளவில்லை. 2012ம் ஆண்டுக்கான பொது ஏலக்குத்தகையில் FMSS நிறுவனம் மட்டுமே விண்ணப்பம் தாக்கல் செய்தது. **போட்டியாக வேறு விண்ணப்பங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில், நாங்கள் மறுபடியும் CPG நிறுவனம் செய்திருந்த ஒப்பந்தத்தின் மூன்றாவது ஆண்டுக்கான கட்டண விகிதத்தை (2012) அடிப்படையாகப் பயன்படுத்தினோம்** (அட்டவணை 3).

2012/2013 ஆண்டுக்கு, ஒவ்வொரு வீட்டுக்கும் $7.01 என்ற கட்டண விகிதத்தில் நிர்வாக முகவர் ஒப்பந்தத்தை FMSS நிறுவனத்திற்கு வழங்கினோம். CPG நிறுவனம் 2012ம் ஆண்டுக்காக நிர்ணயித்திருந்த ஒவ்வொரு வீட்டுக்குமான மூன்றாம் ஆண்டின் $6.73 கட்டண விகிதத்தோடு ஒப்பிடுகையில் இந்த விகிதம் சுமார் 4% அதிகம். நிர்வாக முகவர் கட்டண உயர்வைப் பல்வேறு காரணங்களால் நியாயமென்று மதிப்பிட்டோம். காக்கி புக்கிட்டில் கூடுதலாக ஒரு நகர மன்ற அலுவலகத்தை நடத்தவேண்டிய அவசியம், CPG நிறுவனத்தைவிடச் சிறிய நிறுவனமாக இருந்ததால் வளங்களைச் சிக்கனப்படுத்தும் ஆற்றல் FMSS நிறுவனத்திற்குக் குறைவு போன்ற காரணங்கள் அதில் உள்ளடக்கும். ஏலக்குத்தகை வழங்கப்பட்ட 2012ம் ஆண்டில், வேறு சில மசெக நகர மன்றங்களிலும் $6 முதல் $7 வரையிலான நிர்வாக முகவர் கட்டண விகிதங்கள் விதிக்கப்பட்டதையும் நாங்கள் அறிந்திருந்தோம்.

FMSS நிறுவனத்தின் வீடுகளுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதம் 2012/2013 காலகட்டத்தின் $7.01ல் இருந்து 2013/2014 காலகட்டத்தில் $7.43 ஆக உயர்த்தப்பட்டது. CPG நிறுவனத்தின் வீடுகளுக்கான நிர்வாக முகவர் கட்டண விகிதங்களின் வருடாந்தர 6% உயர்வை இது பிரதிபலிக்கிறது.

சுருக்கமாகக் கூறினால், FMSS நிறுவனத்துடனான எங்கள் ஒப்பந்தங்கள், ஏலக்குத்தகை 2012ல் அறிவிக்கப்பட்டபோது போட்டி விண்ணப்பங்கள் இல்லாத நிலையில் எங்களுக்குக் கிடைத்த சந்தை விவரங்களின் அடிப்படையில், குடியிருப்பாளர்களுக்குத் தடங்கலின்றி சேவைகள் கிடைக்கவேண்டும் என்பதைத் தலையாய முக்கியத்துவமாகக் கருதி வழங்கப்பட்டன.

**தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகத்தின் அறிக்கை மீதான தொடர் நடவடிக்கைகள்**

அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றம் 2014ல் தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகத்தின் தீவிரமான 10 மாதத் தணிக்கைக்கு உட்பட்டது. சில அம்சங்களில் நிதி நிர்வாகக் குறைபாடுகளும் கட்டுப்பாடுகளில் பலவீனங்களும் இருந்ததாக அலுவலகம் கண்டுபிடித்தது. நகர மன்றம் சில மேம்பாடுகள் செய்திருப்பதோடு, கணக்குகளைச் சீர்ப்படுத்தி, நடைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் மேலும் வலுப்படுத்த உதவியாக வெளி கணக்காளர்களை உடனடியாகப் பணியில் அமர்த்தியது. இந்தப் பணியில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சில நிதி விவகாரங்களைத் தீர்ப்பதற்கு நாளாகும். தேசிய வளர்ச்சி அமைச்சு நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைத் தாக்கல் செய்யவும் நகர மன்றம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**நேரடி நிர்வாகத்திற்கு மாற்றம்**

எதிர்வரும் ஜூலை 2015 முதல், நகர மன்றத்தின் நேரடி நிர்வாகத்தை நாங்கள் மேற்கொள்வோம். எந்தவொரு நிர்வாக முகவரும் நகர மன்றத்திற்காகப் பணிபுரிய விண்ணப்பம் தாக்கல் செய்யாதது இதற்குக் காரணம். செலவுகளைக் குறைவாக வைத்திருக்கவும், நகர மன்றத்தின் நீண்டகால நிதி நலனைப் பாதுகாக்கவும் எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்வோம். எனது சக நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர மன்ற அதிகாரிகள் ஆகியோரின் சார்பில், உங்கள் அக்கறைக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் சூழ்நிலை சவால்மிக்கதாக இருந்தாலும், எங்களால் முடிந்தவரை உங்களுக்குத் தொடர்ந்து சிறந்த சேவையாற்றுவோம்.

**திருவாட்டி சில்வியா லிம்**
**தலைவர், அல்ஜூனிட்-ஹவ்காங்-பொங்கோல் ஈஸ்ட் நகர மன்றம்**

**ஜூன் 2015**